**ஏப்ரல் – 29**

**"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்." - சங் 91 : 15**

நம்முடைய துக்கங்களையும் சஞ்சலங்களையும் கர்த்தரிடத்துக்கு எடுத்துச் செல்லுதல் எப்பொழுதும் நமக்கிருக்கும் பாக்கியமுள்ள சலுகையாக இருக்கிறது. " ஏனென்றால், வாழ்க்கையின் துக்கங்களிலிருந்து எப்படிக் கசப்பை, நாமறியாமல் எடுத்துப் போடுவது என்று அவர் அறிந்திருக்கிறார்." எல்லா உலகக் காரியங்களில் மாயையையும் ஆத்துமாவின் அடங்கா ஆசைகளைத் திருப்தி பண்ணவோ, அல்லது முறிந்த ஆவியைத் தேற்றவோ, அவைகளுக்குத் திராணியில்லை என்பதையும் அனுபவத்தின் மூலமாக நமக்குக் காட்டி, இதைச் செய்கிறார். நம்முடைய அனுபவங்கள் எவ்வளவு சஞ்சலத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், சீக்கிரத்தில் அவைகள் முடிந்துவிடும் என்று பிறகு எண்ணத் தோன்றும். நாம் அவைகளை அப்படிச் செய்ய அனுமதித்தால், அவைகள் நம்மில் நீதியாகிய சமாதானப் பலனை உண்டு பண்ணி, பூரண தன்னடக்கம், கவனமுள்ள யோசனை, உபத்திரவத்தை பொறுமையோடு சகித்தல், அன்பு கொண்ட கீழ்ப்படிதல், உண்மை, தேவனிடத்தில் நம்பிக்கை ஆகிய இவைகள் மூலமாகக் கடுமையாகப் பயிற்றுவிக்கப்பட்ட பலமுள்ள உயர்ந்த குணங்களை நம்மில் அபிவிருத்தி செய்யும்.

**-Z ’96, 31 (R 1937).**

கிறிஸ்து மூலமாகத் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணியும், இவ்விதமாக எந்த நேரத்திலும் ஜெபத்தில் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பது, கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்திருக்கிற தனிச் சுதந்திரமாகும். அவர்களுக்கு ஒரு கிருபையான உத்தரவின் நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் எல்லா உபத்திரவங்களிலும், அநுதாபத்தோடும், அன்போடும், உதவியோடும் கூட அவர்களோடிருக்கிறார். உபத்திரவம் தனது நோக்கத்தை நிறைவேற்றியிருக்கும் போது, அதிலிருந்து அவர் விடுவிப்பது நிச்சயம். உபத்திரவத்தின் மத்தியில் அவர்தான் அவர்களுக்கு ஆதாரம். அப்படிப்பட்டவர்கள் அடையக் கூடிய மிக உயர்ந்த கனத்தை அவருடைய மகிமையான இராஜ்யத்தில் அவர்களுக்காக அவர் ஒதுக்கி வைத்திருக்கிறார். **-P ’20, 71.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 14:14,15; சங் 27:8; 50:15; 145:18; மத் 6:6; 7:7,8; யோவா 16:23-26; தானி 12:1-3; சங் 21:2,4; 107:6,7; 2தீமோ 4:8,18; வெளி 2:7,10,17,26,27;3:4,5,12,21.

**கோபுர வாசிப்பு : Z ’15, 264 (R 5757).**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் என்ன? அவற்றின் நிச்சயங்கள் எப்படி என்னைப் பாதித்தது?